
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1054

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

40

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



# கொள்கையை ஏற்றுக்கொண்டால் போதாது, பரப்பிட வேண்டும்!

உள்ளூரில் சாதிய- வர்க்க பாகுபாடுகளுக்கு எதிரான மாற்றத்தை விதைத்திருந்த தோலி சுப்பிரமணியன், பெரியார் காலத்திலேயே தமிழ்நாடு அளவிலான முக்கிய ஆர்ப்பாட்டங்கள், நிகழ்ச்சிகளிலும் முகமறிந்த நபராகத் திகழ்ந்துள்ளார்.

குறிப்பாக, 1952-இல் இந்திய பொதுவுடைமைக் கட்சியினரோடு பெரியாருக்கு விவாதம் உருவாகியிருந்த நிலையில், சமரச முயற்சியாக 1962-இல் ஆனைமுத்துவின் ஏற்பாட்டில், கரூரில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, 1962-இல் தோலியில் இருந்து 20 மைல் தொலைவில் உள்ள கச்சனத்திலும் அதே மாநாடு, சாதி ஒழிப்பு மாநாடாகக் கூட்டப்பட்டது. அந்த மாநாட்டில் பேசிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் கே.பாலதண்டாயுதம், “பொதுவுடைமைக் கட்சியினர், சாதி ஒழிப்புக்கான வேலைத்திட்டம் வகுக்காதது தவறு; அதேபோல பெரியாரும் சமதர்மப் பிரச்சாரத்தை தீவிரமாகச் செய்யாதது தவறு” என இருதரப்பின் குறைகளையும் சுட்டிக்காட்டிப் பேசினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்தவர் தோலி சுப்பிரமணியம்.

1967-இல் மும்பையில் சிவசேனை தமிழர்களைத் தாக்கியது. 01.10.1967-இல் நாடெங்கும் கண்டனக் கூட்டம் நடத்துவோம். ஊர்வலம் எடுப்போம் என அறிவித்தார் பெரியார். 9 பேர் கொண்ட சிவசேனை எதிர்ப்புக் குழுவையும் அமைத்தார். அதில் தோலி ஆர்.சுப்பிரமணியமும் ஒருவர். அதேபோல, 1969-இல் தந்தை பெரியார், தமிழர்களின் பிறவி இழிவு நீக்கப் போராட்டமாக கர்ப்பக் கிரக நுழைவு கிளர்ச்சியை அறிவித்தார். 20.10.1969-இல் மன்னார்குடியில் நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில்தான் இந்த அறிவிப்பை பெரியார் வெளியிட்டார். அந்தப் பொதுக்கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் தோலி சுப்பிரமணியன்.

1974-இல் பெரியார் திடலில் அன்னை மணியம்மையார், இராவண லீலா நடத்தியபோது, முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டவர்களில் தோலி ஆர்.சுப்பிரமணியனும் ஒருவர். வேளாங்கண்ணியில் பகுத்தறிவுப் பயிற்சிப் பாசறை நடத்தினார். பெரியார் உயிரோடு இருக்கும்போதே தஞ்சை பேருந்து நிலையம் பகுதியில் கலைஞரை அழைத்து, பெரியாருக்கு சிலை திறந்தார். இயக்கத்தின் எதிர்காலம் குறித்து, ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் நடத்தினார். பெரியார் மறைவுக்குப் பிறகு, திருவாரூர் தங்கராசுவுடன் இணைந்து செயல்பட்ட தோலி சுப்பிரமணியன், பின்னர் மீண்டும் திராவிடர் கழகத்துக்கே திரும்பினார்.

சமூகப் பணிகளுக்காக சொத்துகளை இழப்பது குடும்பத்திலும் எதிர்ப்பைக் கிளப்பியது. இந்நிலையில், 19.08.1983 அன்று திருத்துறைப்பூண்டியில் முரசொலி புகைப்படக் கலைஞர் ராசேந்திரன் - அருள்ஜோதி இணையரின் திருமணம் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் தோலி சுப்பிரமணியம் பேசியபோது, “நான் இன்னமும் பெரியார் கொள்கையில்தான் இருக்கிறேன்; திராவிடர் இயக்கக் கொள்கையில்தான் இருக்கிறேன்; ஆனால், கொஞ்சம் ஒதுங்கி இருக்க வேண்டிய நிலைமை” என்று கூறினார்.

கலைஞர் பேசும்போது, “என்னுடைய பழைய நண்பர் தோலி சுப்பிரமணியம். நான் அவரிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் நம்மைப் பொறுத்தவரையில் பெரியார் அவர்களுடைய கொள்கையை ஏற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. அந்தக் கொள்கையைப் பரப்பிட வேண்டும். எத்தனை தொல்லைகள் இருந்தாலும், குடும்பப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவற்றை ஒருபுறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு இந்த சமுதாயத்துக்காக நாம் ஆற்ற வேண்டிய பணியைத் தொடர்ந்து ஆற்றிட வேண்டும் என்பதுதான்” என்றுகூறி அவரை மீண்டும் சமுதாயப் பணியாற்றிட அழைத்தார்.

2011-இல் தோலி சுப்பிரமணியன் மறையும் வரை தொடர்ந்தது, அவரது பொதுத்தொண்டு.

...பயணிப்போம்.

## மோடி – நிதீஷ்குமார் கூட்டணியின் மோசடி!

வாக்குத் திருட்டு, வாக்காளர் நீக்கம், போலி வாக்காளர்கள் எனப் பல மோசடிகள் மூலம் பாரதிய ஜனதா கட்சி, தேர்தல் வெற்றிகளை ஈட்டி வருவதை, பல ஆதாரங்கள் சொல்கின்றன. அதற்கு உடந்தையாக இருக்கும் தேர்தல் ஆணையத்துக்கு எதிராக, எதிர்க்கட்சிகள் போராடி வருகின்றன. அந்த மோசடிகளின் வரிசையில், புதிய வகையாக பீகார் சட்டமன்றத் தேர்தலில், அரசு நலத்திட்டத்தையே மோசடியாக்கி, மக்களிடம் அம்பலப்பட்டுள்ளது பா.ஜ.க. மற்றும் நிதீஷ்குமார் கூட்டணி.

பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னர், ‘முதலமைச்சர் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டம்’ என்கிற பெயரில், பெண்களுக்கு சுயதொழில் தொடங்க பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்படும் என அறிவித்து, அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்தது நிதீஷ்குமார் அரசு. சில தொகுதிகளில் ஆண்களின் வங்கிக் கணக்குக்கும் மாற்றப்பட்டது. “இது நலத்திட்டமாக இல்லாமல், வாக்குகளைக் கவர்வதற்கான மோசடி” என அப்போதே எதிர்க்கட்சிகள் விமர்சித்து வந்தன. மக்களின் வாக்குகளை பணத்தின் மூலம் அறுவடை செய்து ஆட்சியைப் பிடிக்கவும் செய்தது பா.ஜ.க. - நிதீஷ்குமார் கூட்டணி. இப்போது, அந்தப் பணத்தைப் பெற்ற ஆண்கள் திரும்ப அளிக்க வேண்டும் என அறிவிப்பினை, வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஆண்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்ட பணம், தவறுதலாக மாற்றப்பட்டது என்றும், அவற்றைத் திருப்பித் தருமாறும் வங்கிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளன. இப்படி வந்த அறிவிப்புகளால் பல தொகுதிகளில் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். “எங்கள் வாக்குகள்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறக் காரணமாக இருந்தன. பிறகு, ஏன் பணத்தைத் திருப்பித் தர வேண்டும்?” எனப் பல கிராமங்களில் மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். வெற்றி பெறுவதற்கு வில்லங்கமாக சூழ்ச்சி செய்த மோடி - நிதீஷ்குமார் கூட்டணியின் மற்றுமொரு மோசடி, மக்களிடம் அம்பலப்பட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### எளிய தொண்டனிடமும் தொகுதி நிலவரம்!



பி.எம்.சூர்யா

2014-ஆம் ஆண்டு, ஜனவரி 23-ஆம் தேதி என் பிறந்த நாளை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவரைச் சந்திக்கையில், “தொகுதியில் மக்கள் என்னய்யா நினைக்கிறாங்க?” எனக் கேள்வி கேட்டார். என்னைப் போன்ற எளிய தொண்டனிடம் அவர் தொகுதி நிலவரம் கேட்டது, என் வாழ்நாளில் மறக்க முடியாத தருணம். அப்போது என்னுடன், பம்மல் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் மு.சதீஷ்குமார், என் நண்பர் ஆர்.விஜயன் ஆகியோரும் இருந்தனர்.

**– பி.எம்.சூர்யா, முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர், பம்மல் 14-வது வார்டு – பல்லாவரம், காஞ்சிபுரம் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

90

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# ஆதி திராவிடர் மேம்பாட்டு நிதி, அவதூறுகளை முறியடிக்கும் உண்மைகள்!

**பட்டியலின, பழங்குடி மக்களுக்காக ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதியை தி.மு.க. அரசு முறையாகச் செலவிடவில்லை என்றும், ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகளை, தி.மு.க. அரசு மூடிவிட்டது என்றும் பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டுகின்றனவே?**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட நிதி (2016-2023) முறையாகச் செலவிடவில்லை என்ற விமர்சனம் என்பது பத்து ஆண்டுக்கால மோசமான அ.தி.மு.க. ஆட்சியுடன் தி.மு.க.வையும் கோர்த்துவிடுகின்ற மோசடி ஆகும்.

இத்தகைய விமர்சனத்தை மிகக் காட்டமாக முன்வைப்பவர்கள், 2024-2025 ஆண்டுக்கான நிதி எப்படி முறையாகச் செலவிடப்பட்டுள்ளது என்பதைப் பற்றி இதுவரை பேசியதில்லை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை திட்டத்தின் வாயிலாக ஒதுக்கப்படும் நிதியை முறையாகக் கையாள ‘சிறப்புச் சட்டம்’ விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் சிந்தனைச்செல்வன் முயற்சியால் முன்வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் இதில் உள்ள உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு, சட்டமன்றத்தில் சிறப்புச் சட்டத்துக்கான அறிவிப்பை வெளியிட்டார். 2024-2025-ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட நிதி, முறையாகக் கையாளப்பட்டுள்ளது. இதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் உள்பட பலரும் விரிவாக வெளிப்படுத்தி உள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், பழைய புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் அரசியல் எதிரிகளில் ஒருவரிடம்கூட நியாயம் கிடையாது என்பதற்கு இதுவே சாட்சி.

ஆதிதிராவிட மாணவர்களுக்கான விடுதிகளைச் சமூக நீதி விடுதிகள் எனப் பெயரிட்டு, அவற்றை மிகச் சிறப்பான தரத்துடன் பராமரித்து வருவது திராவிட மாடல் அரசுதான். ஆனால், பா.ஜ.க.வின் ஊதுகுழலாகச் செயல்படும் சில ஊடகங்கள், திட்டமிட்டு வதந்தியைப் பரப்ப முயல்கின்றன. உண்மையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் செயல்படும் எந்த விடுதியும் மூடப்படவில்லை. கல்வி யாண்டுக்கால அட்டவணை மற்றும் நடைமுறைகளின்படி மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது.

மாணவர் சேர்க்கை என்பது E-KYC மற்றும் பயோமெட்ரிக் முறையில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனால் உண்மையான மாணவர்களுக்கு மட்டுமே அரசு நலத் திட்டங்கள் சென்றடைவதும், போலி மற்றும் இரட்டைப் பதிவுகள் முற்றிலும் தவிர்க்கப்படுவதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் உயர் கல்வித் தேவையைக் கருத்தில் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் 84 புதிய கல்லூரி விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 41 ஹைபிரிட் விடுதிகள் (பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்காக) உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு உயர் கல்விக்காக வரும் மாணவிகள் பாதுகாப்பாகத் தங்கி, கல்வி பயில உதவுவதற்காக மேற்கொள்ளப்பட்டவை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, விடுதிகளில் தங்கி, கல்வி பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு, மரியாதை மற்றும் கல்வி முன்னேற்றம் ஆகியவற்றில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து உறுதியுடன் செயல்பட்டு வரும் நிலையில், இதை வைத்து அரசியல் செய்து, சாதி வன்மத்தையும் கலவரத்தையும் உருவாக்க நினைக்கும் கூட்டத்திடம் அமைதியை விரும்பும் தமிழ்நாட்டு மக்கள் கவனமாக இருக்க வேண்டும்; இருப்பார்கள்.

...வினா தொடரும்.

## கருவூலம்

### கைத்தறிக்கு செல்வாக்கு!

1955-ஆம் ஆண்டு, கழகம் தொடங்கப்பட்ட ஆறு ஆண்டுக்காலத்தில் மக்களின் கவனத்தில் இருக்கும் படியான அமைப்பாக வளர்ந்திருந்தது. ‘கைத்தறி வாரம்’, ‘கைத்தறி விற்பனை’ ஆகியவற்றை அறிவித்து, கைத்தறித் துணிகளுக்கு மக்களிடையே செல்வாக்கை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அந்த ஆண்டு ஜனவரியில், பேரறிஞர் அண்ணா கைத்தறி வாரம் அறிவித்து விற்பனையை அதிகரிக்கச் செய்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131